**O.S.No. 219/2017**

**PW1 :** சண்முகம் தேதி 10.3.2026

வாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 13 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

தாவா சொத்துகள் அனைத்தும் சேமலைக்கவுண்டருக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துகள் என்றால் சரிதான். சேமலைக்கவுண்டருக்கு சின்னசாமிகவுண்டர் மாரப்பகவுண்டர் நல்லம்மாள் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். மாரப்பகவுண்டர் இவ்வழக்கில் 1 ம் பிரதிவாதி. நல்லம்மாள் 3 ம் பிரதிவாதி. சின்னசாமிகவுண்டரின் வாரிசுகள் தான் 4 முதல் 7 பிரதிவாதிகள் என்றால் சரிதான். மாரப்பகவுண்டரின் வாரிசுகள் 2 ம் பிரதிவாதி லோகநாதனும் என் அப்பா வேலுசாமியும் வாரிசுகள். வாதிகளில் 1 ம் வாதி என் தாயார் 2 ம் வாதி என் சகோதரி. என் தந்தை 25.11.2003 ல் இறந்துவிட்டார். சின்னசாமிகவுண்டர் 17.3.2006 இறந்து விட்டார். சேமலைக்கவுண்டர் 20.1.1991 ல் இறந்து விட்டார். சேமலைக்கவுண்டர் உயிருடன் இருக்கும் வரை அவருடைய மகன்களுடன் பூர்வீக சொத்துகளை பொறுத்து எவ்வித பாகப்பிரிவினையும் செய்து கொள்ளவில்லை என்றால் சரிதான். சேமலைக்கவுண்டர் இறந்த பின்னிட்டு அவருடைய வாரிசுகளுக்கு இடையிலும் எவ்வித பாகப்பிரிவினையும் ஏற்படவில்லை என்றால் சரிதான். நாளது வரை பூர்வீக சொத்துகள் நிரந்தர பாகப்பிரிவினை ஏற்படாமல் கூட்டு சுவாதீனத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரிதான். தாவா சொத்துகள் அனைத்தும் சேமலைக்கவுண்டரின் பூர்வீக சொத்துகள் தான். தனிப்பட்ட சொத்துகள் ஏதும் இல்லை. 9.11.2006 ல் அனைத்து வாரிசுகளும் சேர்ந்து தாவா சொத்தின் ஒரு பகுதியை கிரையம் செய்து கொடுத்தோம் என்றால் சரிதான். அதன் சர்வே எண்கள் ஞாபகத்தில் இல்லை. பின்னிட்டு சேமலைக்கவுண்டரின் வாரிசுகள் யாரும் 3 ம் நபர்களுக்கு விற்பனை

செய்தார்களா என்றால் மாரப்பகவுண்டர் 2016 ல் 2 ம் பிரதிவாதி ஒரு லோகநாதனுக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்தார். லோகநாதன் சொத்தின் ஒரு பகுதியில் உள்ள வீட்டை 8 ம் பிரதிவாதி சரவணனுக்கு கிரையம் கொடுத்துவிட்டார். 10, 11, 12, 14 பிரதிவாதிகள் சேர்ந்து 9 ம் பிரதிவாதிக்கு 3 ம் அயிட்ட சொத்தில் 85 சென்ட்டை வழக்கு நிலுவையில் இருக்கும் போது கிரையம் கொடுத்துவிட்டார்கள். நல்லம்மாள் 10.10.2021 ல் இறந்துவிட்டார். நல்லமாளுக்கு 10 முதல் 14 பிரதிவாதிகள் வாரிசுகள். சரவணனுக்கு லோகநாதன் விற்கும் போது நீதிமன்ற அனுமதி எதுவும் பெறவில்லை. சேமலைக்கவுண்டர் இறந்த பின்னிட்டு சின்னசாமிகவுண்டருக்கு 4/9 பங்கும், 1 ம் பிரதிவாதி 4/9 பங்கும், 3 ம் பிரதிவாதி நல்லமாளுக்கு 1/9 பங்கும் உள்ளது என்றால் சரிதான். சேமலைக்கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துகள் நாளது வரை பிரிவினை செய்யாமல் இருப்பதால் நல்லம்மாளுக்கு அவரது தந்தைக்கும் சகோதரருக்கும் பங்குரிமை உள்ளது போல் 1/3 பங்குரிமை நல்லம்மாளுக்கு வருகிறது என்றால் அது எனக்கு தெரியாது. நல்லம்மாளுக்கு பாத்தியப்பட்ட 1/3 பங்கில் பி செட்டியூல் அயிட்டம் 1 ல் ச எண் 98/8, 99/1, 2, 3 பட்டா எண் 120 உட்பட்ட பு.ஏ 4.54 விஸ்தீரணமுள்ள பூமியில் பொதுவில் 1/3 பங்கை சரோஜாவிற்கு ஒரு உயில் சாசனம் எழுதி வைத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 13 ம் பிரதிவாதி தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யும் போது நல்லம்மாள் எழுதி வைத்த உயிலின் நகலையும் சேர்த்து தான் தாக்கல் செய்தார் என்றும் அதனை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். பின்னிட்டு அந்த உயில் பொய்யானது என்றோ மோசடியானது என்றோ பதில் உரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும் உயில் சாசனத்தை மறுத்து பொய்யானது என்று சொல்லவில்லை. உயில் சாசனத்தை உண்மையானது என்று சட்டப்படி நிரூபிக்கும் பட்சத்தில் நல்லம்மாளுக்கு 1/3 பங்குரிமை ஒதுக்குவதில் எனக்கு ஆட்சேபணை உள்ளதா

என்றால் ஆட்சேபணை இல்லை. நல்லம்மாள் 10.10.2021 அவர்களுடைய இறப்பானது 4 ஆண்டுகள் கழித்து 2025 ல் தான் நீதிமன்றத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பின்னிட்டு தான் 10, 11, 12, 14 பிரதிவாதிகள் தாவா பி செட்டியூல் 1 ம் அயிட்டத்தை 9 ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். 2016 ல் லோகநாதனுக்கு வாசாஆ 1 தானசெட்டில்மென்ட் எழுதி கொடுத்துள்ளதில் மாரப்பகவுண்டருக்கு தாவா சொத்தில் 2.95 ஏக்கர் பாத்தியம் என்று சொல்லி மேற்படி ஆவணத்தை எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மாரப்பகவுண்டருக்கு படிப்பறிவு கிடையாது. வாசாஆ 1 ல் சாட்சி கையெழுத்திட்டவர்கள் யார் என்றே எனக்கு தெரியாது. என் குடும்பத்திற்கு பரிச்சயமானவர்கள் அல்ல என்றால் சரிதான். வாசாஆ 1 பொறுத்தவரை சேமலைக்கவுண்டரின் மற்ற வாரிசுகளை ஏமாற்றி லோகநாதனால் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் லோகநாதன் தற்போது சுவாதீனத்தில் இருக்கிறார் என்றால் சரிதான். பின்னிட்டு தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் லோகநாதன் பட்டா பெயர் மாற்றம் செய்ததால் இவ்வழக்கை தாக்கல் செய்தேன். லோகநாதன் 8 ம் பிரதிவாதி சரவணனுக்கு எழுதி கொடுத்தது எந்த சர்வே எண் என்றால் வாசாஆ 1 தானசெட்டில்மென்ட்டில் உள்ள ஏ செட்டியூல். நல்லம்மாளுக்கு சட்டப்படி 1/3 பாகம் பாத்தியம் என்றால் அது எனக்கு தெரியாது. 1/9 பாகம் நான் கோரி இருப்பது சட்டப்படியானது அல்ல என்றால் சரியல்ல. தாவா பி அயிட்ட சொத்தில் 1.27 ½ செண்ட் உயிலின் அடிப்படையில் 13 ம் பிரதிவாதிக்கு சட்டப்படி பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அந்த உயில் நல்லம்மாள் இறந்த பின்னிட்டு நடைமுறைக்கு வந்த பிறகு 13 ம் பிரதிவாதியே சொத்தின் உரிமையாளர் என்று சொன்னால் சரிதான். சரவணனுக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தையும் குழந்தைசாமிக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தை நான் ஒப்பு கொள்கிறேனா என்றால் இல்லை மறுக்கிறேன். நல்லம்மாள் 13 ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த உயில் சாசனம்

தெரியும் என்றும் தற்போது வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உயிலின் படி தாவா பி செட்டியூல் 1 ம் அயிட்டம் 13 ம் பிரதிவாதிக்கு 1.27 **½** பூமியும் இதர அயிட்ட சொத்துகளில் பொதுவில் 1/3 பாகம் சட்டப்படி கிடைக்கத்தக்கது என்றால் சரிதான்.